உகாயனூர் கிராம ஊராட்சி தலைவர்/ செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி.K.ரேவதி கனகராஜு

ந.க.எண்:66/2023-24 நாள்:14 .02.2024

பொருள்: மனைப்பிரிவு வரன்முறை - திருப்பூர் மாவட்டம் - பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம் - உகாயனூர் ஊராட்சி பல்லவராயன்பாளையம் கிராமம் - க.ச.எண்: 192/1B -ல் 3.23 ஏக்கர் (அ) 13100.00ச.மீ பரப்பில் அமைந்த மனைப்பிரிவிலுள்ள 60 மனைகள் வரன்முறைப்படுத்தி உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண்:71 ஊரக வளர்ச்சி துறை, நாள்:16.06.2003
2. அரசாணை எண்:79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறைநாள்: 04.05.2017.
3. அரசாணை எண்:181,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 09.12.2020.
4. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை சுற்றிக்கை கடிதம் ந.க.எண்:13686/2017/LA1 நாள்:08.09.2017.
5. Letter Roc.No.320/2022/TCP3, Dated:07.01.2022 of Director of Town and Country Planning, Chennai (Circular)
6. Letter Roc No.4367/2019/TCP2, Dated: 14.08.2021 of Director of Town and Country Planning, Chennai (Circular)
7. Town and Country Planning Department (Planning Permission, First Floor Kumaran Commercial Complex, Near Railway Station, Tiruppur ROC No. EBCOH6TY/2022/TCP, Date: 15.03.2023.
8. ஊராட்சி தீர்மான எண் : 658/2023-2024 நாள்: 12.02.2024

உத்தரவு:-

திருப்பூர் மாவட்டம் பொங்கலூர் ஊராட்சி ஒன்றியம் உகாயனூர் ஊராட்சி பல்லவராயன்பாளையம் கிராமம் - க.ச.எண்: 192/1B -ல் 3.23 ஏக்கர் (அ) 13100.00ச.மீ பரப்பளவில் புதியதாக அமைந்துள்ள மனைப்பிரிவில் உள்ள 60 மனைகளுக்கு பார்வை 1-ல் காணும் அரசாணையில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் மாவட்டம் SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO.86/2023 என்ற எண்ணிடப்பட்டு பார்வை 7-ல் காணும் கடிதத்தின்படி தொழில்நுட்ப அளவிலான (Technical Approval) ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்கண்ட 60 மனைகளுக்கு SCRUTINY FEES ரூ.60000(ஆறுபது ஆயிரம்) பலவகை வரவு ரசீது எண்.43469 நாள்:12/02/2024. மற்றும் வளர்ச்சி கட்டணம் ஒவ்வொரு சென்டிற்கும் ரூ.1000/- வீதம் ரூ.197000/-(ரூபாய் . ஒரு லட்சத்தி தொண்ணூற்று ஏழாயிரம் மட்டும்) மற்றும் கூராய்வு கட்டணம் ரூ.1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.198000-ம் ஊராட்சி பலவகை வரவு ரசீது எண்.43468 நாள்: 12.02.2024-ன்படி செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி கட்டணங்கள் யாவும பெறப்பட்டுள்ளதாலும் திருப்பூர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு வரைபடத்தில் உள்ளபடி மனைப்பிரிவு சாலை 4060.97 சதுர மீட்டர், உள்ளாட்சிக்கான பொது உபயோகம் பரப்பு 80.32 சதுர மீட்டர், மின்பகிர்மானத்திற்கு பொது உபயோக பரப்பு (TANGEDCO) 75.19 சதுரமீட்டர், பூங்கா 929.56 சதுரமீட்டர் பரப்பளவை திருப்பூர் தொட்டிபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்: 1455/2023 நாள்: 06.03.2023-ன்படி ஊராட்சிக்கு தானக்கிரயமாக வழங்கப்பட்டு விட்டதாலும் . திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் அவர்கள் T.R.2024/32/08/000337SD நாள் 10/01/2024-ன் படி பொது பயன்பாட்டு இடங்கள் ஊராட்சி பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டு உள்ளாதாலும் தொழில்நுட்ப அளவிலான ஒப்புதல் (Technical Approval) வழங்கப்பட்டுள்ள 60 குடியிருப்பு மனைகளை வரன்முறைப்படுத்தி மனையிட ஊராட்சிமன்ற தீர்மான எண்:658/2023-2024, நாள்:12.02.2024 ,தீர்மானம் நிறைவேற்றபட்டு அனுமதி வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

பார்வை 1 முதல் 8 வரையிலான அரசாணை மற்றும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணை நிலை எண்.172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 13.10.2017-ல் விதி எண்.7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்படதாக கருதப்படும்.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப் பிரிவிற்கு வரன்முறைபடுத்துதல் உத்தரவு வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இவ்வுத்தரவு எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.
3. தானபத்திரம் முலம் ஒப்படைக்கப்பட்ட பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளின் அளவுகளில் மாறுபாடு அல்லது குறைபாடுகள் ஏதுமிருப்பின், அதனை நில உரிமையாளரே சரிசெய்து கொடுக்க வேணடும்

இணைப்பு:-

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் மற்றும் வரைபடம்.

தலைவர்/செயல அலுவலர்,
உகாயனூர் ஊராட்சி

பெறுநர்:-

1.திரு.பிரகாஷ் & திரு.விஸ்வநாத ராத/பெ நடராஜன்
கதவு எண்: 16/17 , ரங்கநாதன்புரம், ராயபுரம்
திருப்பூர் - 641601.

நகல்:-

1. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்(ஊராட்சிகள்),திருப்பூர் அவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.
3. சார்பதிவாளர் அலுவலகம், தொட்டிபாளையம், திருப்பூர்.
4. வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சிகள்), பொங்கலூர்.